**13.08.2025**

அ.வ.எண். **113/2017**

<u>வா.சா.1 கிருஷ்ணன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

**1**. தாவாசொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சி.கே.சண்முகம் என்பருக்கு பாத்தியமாகும். அவருக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்தாகும். அவரின் தகப்பனார் கன்னியப்ப முதலியாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். கன்னியப்ப முதலியாருக்கு எத்தனை வாரிசுதாரர்கள் என்றால் எனக்கு தெரியாது. எனது பிரமாணவாக்கமூலம் மற்றும் பிராதுவில் **50** வருடமாக வாதியின் குடும்பம் பற்றி தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சண்முகம் மற்றும் அவரது சகோதரர்கள் **50** வருடத்திற்கு முன்பு வாய்மொழியாக பாகபிரிவினை செய்ததாக என்து பிரமாணவாக்கமூலம் மற்றும் எதிருரையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

**2**. அப்படி பிராது மற்றும் பிரமாணவாக்குமூலத்தில் கூறியுள்ளது தவறு என்றால் சரிதான். தாவாசொத்தை எந்த வருடம் நான் கிரையம் பெற்றேன் என்றால் **15.03.2004** அன்று கிரையம் பெற்றேன். யாரிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் சி.கே.சண்டமுகத்தின் வாரிசுதாரர்களின் முகவர் ஜெயக்குமாரிடமிருந்து கிரையம் பெற்றேன். தாவா அ அட்டவணை பி, சி அட்டவணை சொத்துகள் அனைத்தும் அவரிடமிருந்துதான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். சி.கே.சண்டமுகத்தின் வாரிசுகள் யார் யார் என்றால் யுவராஜ் மட்டும் தெரியும் மற்றவர்கள் பெயர் தெரியாது.

**3**. எனது பிரமாணவாக்குமூலத்திலும் பிராதிலும் மற்ற வாரிசுதாரர்கள் பெயர் குறிப்பிட்டிருந்தால் அதை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஜெயக்குமார் என்பருக்கு சி.கே.சண்டமுகத்தின் வாரிசுதாரர்கள் எந்த வருடம் பொது முகவர் அதிகாரம் பத்திரம் எழுதி கொடுத்தார்கள் என்றால் **2002**ம் வருடமாகும். ஜெயக்குமார் என்பவர் சி.கே.சண்டமுகத்திற்கு என்ன உறவு என்றால் சகலை ஆவார். ஜெயக்குமார் சென்னையை சேர்ந்தவர்.

**4**. ஜெயக்குமார் என்பவர் சி.கே.சண்டமுகத்துடன் வரும்போது எனக்கு தெரியும். பல வருட பழக்கம். சி.கே.சண்டமுகம் உயிருடன் இருக்கும்போது தாவா சொத்தில் பயிர் செய்தாரா என்றால் செய்தார். சி.கே.சண்டமுகம் எப்போது இறந்தார் என்றால் **2000**ம் வருடத்தில் இறந்தார். பிரதிவாதி சுந்தரமூர்த்தி என்பவர் சி.கே.சண்டமுகத்திற்கு உறவினரா என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி சுந்தரமூர்த்தி தாக்கல் செய்த பதிலுரை பற்றிய விவரங்கள் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரையில் சி.கே.சண்டமுகம், சி.கே.கிருஷ்ணராஜ், வெங்கடகிருஷ்ணன் என்ற காளிராஜ் மற்றும் சுந்தரமூர்த்தி ஆகியோர் உடன்பிறந்தவர்கள் என்று கூறியுள்ளார்கள் நான் அந்த விவரம் தெரிந்து வழக்கிற்காக தெரியவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**5**. பிரதிவாதி ஜெயக்குமார் மற்றும் என்மீது காஞ்சிபும் நிலஅபகரிப்பு பிரிவில் புகார் அளித்தார் என்றால் சரிதான். மேற்சொன்ன புகாரின்படி

என்மீதும் ஜெயக்குமார் மீதும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்களா என்றால் செய்தார்கள் அது பொய் வழக்கு. மேற்சொன்ன புகாரின் அடிப்படையில் ஜெயக்குமார் பெயரில் ஏற்பட்ட பொது அதிகார ஆவணத்தின் சண்முகத்தின் வாரிசுதாரர்கள் கையொப்பம் இல்லை என்று கைரேகை நிபுணர் சான்று அளித்தார் என்றால் எனக்கு தெரியாது.

**6.** முதல் தகவல் அறிக்கை.**72/2010** அடிப்படையில் இறுதி அறிக்கை தாக்கல் செய்து செங்கல்பட்டு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் **1**ல் சி.சி.**45/ 2015** ஆக தாக்கல் செய்யபட்டது என்றால் சரிதான். சுந்தமூர்த்தி எந்த தேதியில் வாதிகளின் அனுபவத்தில் தடை செய்தார் என்றால் **2016**ம் வருடம் ஆகும். சுந்தரமூர்த்தி உயிருடன் உள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு வழக்கு பற்றி விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சுந்தரமூர்த்தி இறப்பு தெரியாது.

**7.** சுந்தரமூர்த்தி இறந்தபிறகு அவரது வாரிசுகளை வழக்கின் தரப்பினராக சேர்த்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. சுந்தமூர்த்தி வழக்கு தாக்கல் செய்வதற்கு **1** ஆண்டுக்கு முன்பே அவருக்கு பக்கவாதம் நோய் பாதிக்கப்பட்டு அவரால் நடமாட முடியாது என்றால் சரிதான். பிரதிவாதி பக்கவாதம் நோயால் பாதிக்கப்படட எங்கேயும் நகர முடியாமல் இருந்தார் ஆனால் இந்த வழக்கை பொய்யாக அவர் மீது தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே தாவா சொத்துகளில் உள்ள **3** அட்டவணை சொத்தகளை பொறுத்து பட்டா ரத்து செய்ய வருவாய் கோட்டாட்சியரிடம் பிரதிவாதி மனு செய்தார் என்றால்

எனக்கு தெரியாது. அந்த மனு அடிப்படையில் நானும் மற்ற வாதிகளும் வருவாய் கோட்டாட்சியரிடம் ஆஜராகி எழுத்து மூல ஆட்சேபணை கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். அதன் பிறகு வருாய் கோட்டாட்சியர் உத்தரவிட்டு அந்த பட்டாவை ரத்து செய்து சண்முகம், கிருஷ்ணராஜன், வெங்கடகிருஷ்ணன் என்ற காளிதாஸ் மற்றும் சுந்தரமூர்த்தி பெயரில் பட்டா மாற்ற பட்டது என்றால் சரிதான்.

**8.** பட்டா மாற்றிய பிறகு தாவாசொத்துகளை சுந்தரமூரத்தி அவரது மகன் விவேக் என்பவருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது நாங்கள் தான் பயிர்வைத்து வருகிறோம். சுந்தரமூர்த்தி இறந்தபிறகு அவரது வாரிசுதாரரான விவேக் என்பவரை மட்டும் செட்டில்மெண்ட் ஆவணபடி வாரிசுதாரராக சேர்க்க வேண்டும் என்று மனு செய்தோம் என்றால் எனக்கு தெரியாது. எந்தகாலத்திலும் தாவாசொத்தை மற்ற வாதிகளான எனது மகள் மற்றும் மகன் அனுபவித்தது கிடையாது என்றால் சரியல்ல. **3** வாதிகள் பெயரில் தாவாசொத்திற்க்கு பட்டா எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன்.

**9.** பட்டா எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. தாவாசொத்துகளை நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம் என்று காட்டுவதற்கு வரி ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்யும்போதும் மற்றும் நிலுவையில் இருக்கும்போதும் வாதிகளின் பெயரில் பட்டா மற்றும் வரி ரசீதுகள் எதுவும் தாக்கல் செய்யவில்லை

வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சி.கே.சண்முகம் என்பவரின் வாரிசுதாரர்கள் மூத்த மகன் தனசேகரன் என்பவருக்கு மற்ற 3 நபர்கள் விடுதலை ஆவணம் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. சுந்தரமூர்த்தி மற்றும் அவருடன் வேறு நபர்கள் 2016ம் வருடம் எனது அனுபவத்தை தடை செய்ய வந்தார்களா என்றால் சரிதான்.

**10.** சுந்தரமூரத்தி மற்றும் அவரது வாரிசுதாரர்களை நான் பார்க்கவில்லை. சுந்தரமூரத்தி சென்னையில் வசித்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. வழக்கில் அந்த விவரம் சொல்லவில்லையா என்றால் சொல்லவில்லை. சுந்தரமூரத்தி பக்கவாதம் நோயால் பாதிக்கப்பட்ட நபர் என்னை தொந்தரவு செய்தார் என்று பொய்யாக வழக்கு மூலம் காட்டி பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல.